# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

**தலைமைக் கழகம்**

எண் : 15, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014

தொலைப்பேசி : 044 - 2848 1235


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி : 06.09.2022

## தலைமைக் கழக செய்தி வெளியீடு

தென்தமிழ்நாட்டில் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் கல்விக்காக பாடுபட்டவரும், 'நியாயத்திற்கு ஒரு மூக்கையா; நியாயத்தைத் தவிர வேறு எதற்கும் தலைவணங்க மாட்டார்' என்று அறிஞர் அண்ணா போற்றிய **திரு.பி.கே.மூக்கையா தேவர் அவர்களின் நினைவு தினம்** இன்று கடைபிடிக்கப்படுகிறது. இதையொட்டி **கழக பொதுச்செயலாளர் திரு. டிடிவி தினகரன் அவர்களின் சார்பில்**, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி, பசும்பொன் முத்துராலிங்கதேவர் கல்லூரியில் அமைந்துள்ள அன்னாரின் நினைவிடத்தில் கழக தேர்தல் பிரிவு செயலாளரும், மதுரை புறநகர் தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான **திரு.இ.மகேந்திரன்**, கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினரும், கழக இதயதெய்வம் அம்மா பேரவை செயலாளரும், கழக செய்தி தொடர்பாளருமான **திரு.K.டேவிட் அண்ணாதுரை** மற்றும் மதுரை மாநகர் வடக்கு மாவட்ட கழக செயலாளர் **பேராசிரியர் M.ஜெயபால்** ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்வில் மாவட்ட, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட / வார்டு கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், ஊராட்சி / கிளைக் கழக நிர்வாகிகள், கழக தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என திரளானோர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.




**தலைமைக் கழகம்**

**அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்**